KEMENTERIAN SUMBER MANUSIA

PERKESO

**www.perkeso.gov.my**

**1-300-22-8000**

- PERKESO Official
- @perkeso official
- @PERKESOofficial
- PERKESO

KEMENTERIAN SUMBER MANUSIA

PERKESO

# இல்லத்தரசிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம் (SKSSR)



## இல்லத்தரசிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

2022-ஆம் ஆண்டு இல்லத்தரசிகள் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இல்லத்தரசிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம் (SKSSR) அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் வீட்டு வேலைகளில் ஈடுபடும் போது விபத்துக்குள்ளாகும் அல்லது நோய்வாய்ப்படும் இல்லத்தரசிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வீட்டு வேலை நிர்வகிப்பின் போது இல்லத்தரசிகள் வீட்டிற்கு உள்ளே அல்லது வெளியே விபத்துக்கு ஆளாகலாம்.

மருத்துவ மதிப்பீட்டாளர் அல்லது மேல்முறையீட்டு மருத்துவர்களால் உடல் நலக்குறைவு என சான்றளிக்கப்பட்ட நோய் அல்லது உடற்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட இல்லத்தரசிகளையும் இத்திட்டம் பாதுகாக்கின்றது.

இத்திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்புவோர் இதில் பதிவு செய்துக் கொள்ளலாம். இதன் பதிவு முற்றிலும் தன்னார்வத்தின் அடிப்படையைக் கொண்டது.

## இல்லத்தரசி வரையறை

இத்திட்டம் திருமணமான அல்லது திருமணமாகாத பெண், வீட்டை முழுநேரமாக நிர்வகிக்கும் அல்லது பகுதி நேரமாக நிர்வகிக்கும் பெண், சட்டத்தின் கீழ் திருமணம் பதிவு செய்யப்பட்ட பெண், விதவை அல்லது தனித்து வாழும் தாய்மார்கள் உட்பட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட இல்லத்தரசிகளுக்கு பாதுகாப்பு வழங்குகின்றது.

### பதிவு மற்றும் பங்களிப்பு செலுத்தும் முறை

நாடு முழுவதும் உள்ள பெர்கேசோ அலுவலகங்களில் அல்லது **suri.perkeso.gov.my/ www.perkeso.gov.my** என்ற அகப்பக்கத்தின் மூலம் இல்லத்தரசிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் பதிவு செய்துக் கொள்வதோடு அதற்கான பங்களிப்பையும் செலுத்தலாம்.

அமல்படுத்தப்பட்ட தேதி






இல்லத்தரசிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் பதிவு செய்வதற்கு QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

## தேவையான தகுதிகள்

1. இன்னும் 55 வயதை எட்டாத மலேசிய குடிமக்கள்/நிரந்தர குடியிருப்பாளர்களான இல்லத்தரசிகள்.
2. முதன் முறையாக பங்களிப்பதற்கு, இல்லத்தரசியின் வயது 54க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. 12 மாதங்களுக்கான பங்களிப்புகளை முன்கூட்டியே செலுத்த வேண்டும்.

## பங்களிப்பு

1. 12 மாதங்களுக்கான ரி.ம.120.00 பங்களிப்பை முன்பணமாக செலுத்த வேண்டும்.
2. கணவன், இல்லத்தரசி, குடும்ப உறுப்பினர் அல்லது மூன்றாம் தரப்பினர் இப்பங்களிப்பைச் செலுத்தலாம்.
3. கணவன் தனது மனைவிக்காக பங்களிப்பைச் செலுத்தினால் இல்லத்தரசி தொடர்ச்சியான பாதுகாப்பைப் பெறுவதை உறுதிசெய்ய வேண்டும். அதாவது கணவன் தனது மனைவிக்காக பங்களிப்பைச் செலுத்த தொடங்கி விட்டால் அதன் பின் பின்வாங்க முடியாது.
4. வருமான இழப்பு மற்றும் மற்ற காரணங்களுக்காக கணவரால் பங்களிப்பைத் தொடர்ந்து செலுத்த முடியவில்லை என்றால், தற்போதுள்ள பங்களிப்பு காலம் முடிவதற்கு 60 நாட்கள் மீதியிருக்கும் முன்னரே பெர்கேசோவிற்கு தெரிவிக்க வேண்டும்.

### இல்லத்தரசிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் பயன்களை எவ்வாறு கோருவது

இல்லத்தரசிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் பயன்களை பெற உரிமைகோரல் படிவம்-**SR 6**ஐ பூர்த்தி செய்ய வேண்டும். இந்தப் படிவத்தை நாடு முழுதும் உள்ள பெர்கேசோ அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

## இல்லரத்துப்பணி பேரிடர் பாதுகாப்பு

1. மருத்துவச் சலுகை
2. நிரந்தர உடல் செயலிழப்புச் சலுகை
3. நிலையான உதவியாளர் கொடுப்பனவு
4. உடல் மறுவாழ்வு அல்லது டயாலிசிஸ் வசதி
5. சவ நிர்வாகச் சலுகை
6. ஓய்வூதியம்

### மருத்துவச் சலுகை

வீட்டு வேலைகளில் ஈடுபடும் போது விபத்துக்குள்ளாகும் அல்லது நோய்வாய்ப்படும் இல்லத்தரசிகள் பெர்கேசோவால் நியமிக்கப்பட்ட (கட்டணச் சட்டம் 1951க்கு உட்பட்ட) மருந்தகம் அல்லது அரசாங்க மருத்துவமனைகளில் வெளிநோயாளர் மருத்துவ சிகிச்சையைப் பெறலாம். மேலும், அரசாங்க மருத்துவமனைகளில் இரண்டாம் வகுப்பு வார்டில் சிகிச்சை பெறுவதற்கான சலுகையும் வழங்கப்படும்.

### நிரந்தர உடல் செயலிழப்புச் சலுகை

வீட்டு வேலைகளில் ஈடுபடும் போது பங்களிப்பு செய்யும் இல்லத்தரசிகள் விபத்துக்குள்ளாகி அல்லது நோய்வாய்ப்பட்டு நிரந்தர உடல் செயலிழப்பு ஏற்பட்டால் குடும்பத்தை நிர்வகிக்கும் திறன் குறையும் நிலை நேர்ந்தால் மருத்துவ மதிப்பீட்டாளர் அல்லது மேல்முறையீட்டு மருத்துவ வாரியத்தால் மதிப்பிடப்படுவர். இல்லத்தரசியின் உடல் செயலிழப்பு மற்றும் பங்களிப்பு காலத்திற்கு ஏற்ப ரி.ம.30,000 வரை பண உதவி வழங்கப்படும்.

### சவ நிர்வாகச் சலுகை

இத்திட்டத்தின் கீழ் பங்களிப்பு செலுத்தும் இல்லத்தரசி, வீட்டு வேலைகளில் ஈடுபடும் போது விபத்துக்குள்ளாகினாலோ அல்லது நோய்வாய்ப்பட்டாலோ அல்லது நோய் கொடுப்பனவு சலுகையை பெறுநராக இருந்தாலோ அல்லது ஏதேனும் காரணத்தால் 55 வயதை அடையும் முன் இறந்தாலோ அவரின் இறுதிச் சடங்கு செய்வதற்காக ரி.ம.2,000 உதவித்தொகை இறந்தவரைச் சார்ந்தவருக்கு அல்லது இறுதிச் சடங்குகளைச் செய்யும் தரப்பினருக்கு வழங்கப்படும்.

### உடல் மறுவாழ்வு அல்லது டயாலிசிஸ் வசதி

மருத்துவ மதிப்பீட்டாளர் மூலம் நிரந்தர இயலாமையால் பாதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவ சான்றிதழ் வழங்கப்பட்டு, செயற்கைக் கால்கள், சக்கர நாற்காலிகள், தடி மற்றும் இதர உடல் மறுவாழ்வு வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டால், இல்லத்தரசிக்கு ஒரு பங்களிப்பு காலத்தில் ரி.ம.50,000 வரை நிதியுதவி வழங்கப்படும். 1951-ஆம் ஆண்டு கட்டணச் சட்டத்திற்கு ஏற்ப டயாலிசிஸ் சிகிச்சைக்கு மாதந்தோறும் ரி.ம.200 வழங்கப்படும்.

## இயலாமை பாதுகாப்பு நலன்கள்:

1. நோய் கொடுப்பனவு
2. நிலையான உதவியாளர் கொடுப்பனவு
3. உடல் மறுவாழ்வு அல்லது டயாலிசிஸ் வசதி
4. சவ நிர்வாகச் சலுகை
5. ஓய்வூதியம்

### நோய் கொடுப்பனவு

இத்திட்டத்தின் கீழ் பங்களிப்பு செலுத்தும் இல்லத்தரசிகள் மருத்துவ மதிப்பீட்டாளர் அல்லது மேல்முறையீட்டு மருத்துவர் குழுவால் தனது குடும்ப நிர்வாகத்தின் பெரும்பகுதியை மேற்கொள்ள முடியாத அளவுக்கு நிரந்தர இயலாமை உறுதி செய்யப்பட்டால், ரி.ம.300 வரை மாதாந்திர கொடுப்பனவு வழங்கப்படும். இல்லத்தரசி 55 வயதை அடைந்தாலோ அல்லது இறந்தாலோ இந்த சேவை நிறுத்தப்படும்.

### நிலையான உதவியாளர் கொடுப்பனவு

உடல் செயலிழப்புக்கு ஆளாகும் இல்லத்தரசிகள் நிரந்தர உடல் செயலிழப்புச் சலுகை அல்லது நோய் கொடுப்பனவு பெற தகுதியானவர்கள் ஆவர். இல்லத்தரசிகள் தொடர்ந்து மற்றவர்களின் தனிப்பட்ட பராமரிப்பின் கீழ் வாழும் நிலை நேர்ந்தால் அவர்களுக்கு மாதந்தோறும் ரி.ம.250 நிலையான நிதியுதவி வழங்கப்படும். இல்லத்தரசிகள் 55 வயதை அடைந்தாலோ அல்லது இறந்தாலோ இந்த சேவை நிறுத்தப்படும்.

### ஓய்வூதியம்

பங்களிப்பு செலுத்தும் இல்லத்தரசி வீட்டு வேலைகளில் ஈடுபடும் போது விபத்துக்குள்ளாகினால் அல்லது நோய்வாய்ப்பட்டால் அல்லது நோய் கொடுப்பனவு உதவித்தொகையைப் பெற்றிருந்தால் அல்லது ஏதேனும் காரணத்தால் 55 வயதை அடையும் முன் இறந்துவிட்டால் நிர்ணயிக்கப்பட்ட பங்கின்படி இறந்தவரைச் சார்ந்தவருக்கு மாதத்திற்கு ரி.ம.300 ஓய்வூதியம் வழங்கப்படும். மனைவியை இழந்த கணவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பங்களிப்பு செலுத்தும் இல்லத்தரசிக்கு கணவனோ அல்லது குழந்தையோ இல்லை என்றால் ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட இல்லத்தரசியின் பெற்றோருக்கு வழங்கப்படும்.

இல்லத்தரசியின் பிள்ளைகளுக்கு 21 வயது ஆகும் வரை அல்லது திருமணம் ஆகும் வரை அல்லது முதல் பட்டப்படிப்பு முடியும் வரை இந்த ஓய்வூதியம் வழங்கப்படும். அதே வேளையில், இல்லத்தரசிக்கு மனவளர்ச்சி குன்றிய, தன்னைத் தானே கவனித்துக் கொள்ள முடியாத உடல் இயலாமையை கொண்ட பிள்ளை இருந்தால், அப்பிள்ளைக்கு 55 வயது ஆகும் வரை இவ்வுதவி வழங்கப்படும்.

இந்த ஓய்வூதியம் மனைவியை இழந்த கணவனுக்கு அல்லது பெற்றோருக்கு 55 வயது வரை மட்டுமே வழங்கப்படும். அவர்கள் மலேசிய குடிமக்களாக இருத்தல் அவசியம் ஆகும். ஒரு வேளை மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்து கொண்டால், அவருக்கு ஓய்வூதியம் வழங்குவது நிறுத்தப்படும்.